பக்கங்கள் 19

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 05 வியாழக்கிழமை 21.12.2023 அதிர்வு 143

## பண்டிகைக் காலத்தையொட்டி விசேட பஸ், ரயில் சேவைகள்



பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நாளை முதல் விசேட பஸ் மற்றும் ரயில் சேவைகளை 04

# நாடெங்கும் தீவிர தேடுதல்

# 4 நாள்களில் 8,451 பேர் கைது

## போதைப்பொருள் வர்த்தகத்துக்கும் பாதாளக் குழுவுக்கும் முடிவு கட்டியே தீருவோம் என்கிறார் அமைச்சர் டிரான் அலஸ்





“போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய 4 ஆயிரத்து 665 பேர் இருகின்றனர் என்று புலனாய்வுத் தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன. இவர்கள் அனைவரையும் கைது செய்ய உத்தரவிட்டுள்ளேன். கடந்த 4 நாள்களில் மாத்திரம் புலனாய்வுத்துறை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 731 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். புலனாய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்படாத சந்தேக நபர்களும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர். மொத்தமாக 8 ஆயிரத்து 451 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 346 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 61 பேர் சொத்து விசாரணைக்காகவும், 697 பேர் புனர்வாழ்வுக்காகவும் அனுப்பப்பட்டுள்ளனர்.” 04

# எங்களை இங்கு அழைத்து வந்ததும் பிரிட்டன்தான் அம்போ எனக் கைவிட்டுச் சென்றதும் அந்நாடுதான்

## வலி சுமந்த வரலாற்றைத் தூதுவரிடம் எடுத்துரைத்த மனோ



“இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர் தொடர்பில் பிரித்தானியாவுக்கு பாரிய கடப்பாடு உண்டு. 200 வருடங்களுக்கு முன் 1823 இல் இருந்து எங்களை இலங்கைக்கு, பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்து அழைத்து வந்ததும் நீங்கள்தான். 1948இல் எங்களை அம்போ எனக் கைவிட்டுப் போனதும் நீங்கள்தான். இதைச் சொல்லி குற்றச்சாட்டு பத்திரிக்கை படிக்க நான் இங்கே வரவில்லை. உங்களுக்கு இந்த வரலாற்றை ஞாபகப்படுத்தவே வந்துள்ளேன். வரலாற்றை மனதில் கொண்டு, இந்த நிகழ்காலத்தில் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையகத் தமிழருக்கு நீங்கள் உதவிடுங்கள் என நட்புரீதியாக உங்களை நான் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் என்ற முறையில் கோருகின்றேன்.”

– இவ்வாறு இலங்கையில் பிரித்தானிய உயர்ஸ்தானிகராகப் பொறுப்பேற்றுள்ள அன்ரூ பெட்றிக்கை சந்தித்த போது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற 04

# இமயமலைப் பிரகடனம் மிகவும் பயங்கரமானது

## பதறுகின்றார் விமல்



**இமயமலைப் பிரகடனம் மிகவும் பயங்கரமானது என்று விமர்சித்துள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச.**

**இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-**

**இலங்கையில் சமாதான உடன்படிக்கை தோல்வி அடைந்தது. இதனால் இலங்கையைப் பிரிக்க முடியாமல்போனது. ஆனால், சூடானைப் பிரித்தனர். இலங்கையைப் பிரித்திருந்தால், ஈழத்துக்கு அப்பாற்பட்ட பகுதியில்தான் தெற்காசியாவின் காசா பகுதி அமைந்திருக்கும். பாலஸ்தீன மக்களுக்கு இன்று நடப்பதுதான் சிங்கள மக்களுக்கு நடந்திருக்கும். இதுதான் உண்மைக் கதை.**

சமாதான முயற்சி ஏன் தோல்வி அடைந்தது என்பது குறித்து நோர்வே ஆராய்ந்தது. பேராசிரியர்களால் 140 பக்கங்களில் அறிக்கையொன்று வழங்கப்பட்டது. தோல்விக்கான காரணங்கள் அதில் விவரிக்கப்பட்டிருந்தன.

சமஷ்டி ஆதரவு போக்கில் இருந்த சந்திரிக்கா அம்மையாரின் ஆதரவைப் பெற்று நடவடிக்கைகளை முன்னெடுக்க அப்போதைய பிரதமர் (ரணில் விக்கிரமசிங்க) தவறியமை முதல் காரணம்.

இலங்கையில் பிக்கு சமூகத்தின் ஆதரவைத் திரட்ட தவறியமை இரண்டாவது காரணமாகும். அதாவது பிக்குகளின் ஆதரவைத் திரட்ட உரிய வேலைத்திட்டமொன்று இருக்கவில்லை என முழுமையாகக் கூறவும் முடியாது. சில பிக்குகள் இருக்கவே செய்தனர்.

தற்போதுகூட டயஸ்போராக்கள், சில பிக்குகளைப் பிடித்துக்கொண்டு இமயமலைப் பிரகடனம் எனும் திட்டமொன்றை முன்னெடுக்கின்றனர். ரணில் கூறும் 13 இற்கு அப்பால் என்ற யோசனையை விடவும் மிகவும் பயங்கரமான திட்டத்துடன் மீண்டும் வந்துள்ளனர்.

ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமயவின் ஆதரவு இருக்கவில்லை எனவும் காரணம் கூறப்பட்டிருந்தது. ஆனால், இன்று ஜே.வி.பியிடம் தேசியவாதம் இல்லை. ஊழல் எதிர்ப்புப் பற்றி மாத்திரமே குரல் எழுப்புகின்றனர். சந்திரிகாவும், ரணிலும்கூட நட்புடன் செயற்பட்டு வருகின்றனர். – என்றார்.




# நாடளாவிய ரீதியில் விசேட பாதுகாப்பு

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தப் பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

அதற்காகப் பதில் பொலிஸ்மா அதிபர் ஏற்கனவே இரண்டு விசேட சுற்றுநிருபங்களை வெளியிட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

பொதுமக்கள் அதிகமாக நடமாடும் இடங்களில் சிவில் உடையிலும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.





# மிருசுவில் படுகொலையின் நினைவேந்தல்

(த.சுபேசன்)

யாழ். தென்மராட்சி – மிருசுவில் பகுதியில் கடந்த 2000ஆம் ஆண்டு இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட எட்டு பொதுமக்களுடைய 23ஆம் ஆண்டு நினைவேந்தல் மிருசு வில் பகுதியில் அனுஷ்டிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் செ.மயூரனின் ஏற்பாட்டில் மேற்படி நினைவேந்தல் மற்றும் படுகொலை செய்யப்பட்டோரின் குடும்பத்தினருக்கு உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வுகளில் சமூக சேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி கலந்துகொண்டு பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உதவிப் பொருள்களை வழங்கி வைத்தார்.

கடந்த 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி சிறுவர்கள் உட்பட 8 பேரை இலங்கை இராணுவம் கூரிய ஆயுதங்களால் குத்திப் படுகொலை செய்திருந்தனர். மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவ அதிகாரிக்கு 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ஆம் திகதி மரண தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் அவர் 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### எங்களை இங்கு...

உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் தலைவர் மனோ கணேசன் எம்.பி. மற்றும் பிரதித் தலைவர் வி.இராதாகிருஷ்ணன் எம்.பி. மற்றும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரூ பெட்ரிக் ஆகியோர் இடையில் கலந்துரையாடல் கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரலாயத்தில் நேற்று நடைபெற்றது.

பிரித்தானிய உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை ஆவணத்தைக் கையளித்த மனோ கணேசன் எம்.பி. இது தொடர்பில் மேலும் கூறியதாவது:-

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றம் வரும் போதெல்லாம், 1948இல் இலங்கையின் வெளிநாட்டு வைப்பு, ஜப்பானுக்கு அடுத்தபடியாக ஆசியாவில் அதிகமாக இருந்தது என்று சொல்லுவார். அது உண்மை. அன்று இலங்கையில் இருந்த ஒரே ஏற்றுமதி தொழில் தேயிலை இறப்பர் பெருந்தோட்டத் தொழில்துறைதான். ஆகவே, ரணிலின் கூற்றின் பின்னணி என்னவென்றால், அந்த அதிகூடிய வெளிநாட்டு வைப்புக்கு காரணம், எமது மக்களின் உழைப்பு, வியர்வை, இரத்தம் ஆகியவைதான் என்பதை பிரித்தானியா உணர வேண்டும்.

ஆனால், 1948இல் சுதந்திரத்தின் பின் இலங்கை அமைந்த முதல் அரசு தந்த பரிசு, எமது குடியுரிமை பறிப்பு, வாக்குரிமை பறிப்பு ஆகியவைதான். ஆனால், இங்கேதான் பிரித்தானியாவின் பொறுப்பு தவறல் நிகழ்ந்தது. 1948இல் இலங்கை குடியரசு ஆகவில்லை. 1972 வரை எமது நாடு டொமினியன் அந்தஸ்த்தில் இருந்தது. பிரித்தானியா மகாராணிதான் எங்கள் நாட்டு தலைவராக 1972 வரை இருந்தார். இங்கே அவரது பிரதிநிதி மகா தேசாதிபதி இருந்தார்.

ஆகவே பிரித்தானியா மகாராணியின் அரசின் கண்களுக்கு முன்தான் இந்த உலக மகா அநீதி நிகழ்ந்தது. எமது குடியுரிமையும், வாக்குரிமையையும் பறித்து எம்மை நாடு கடத்திய போது பிரித்தானியா பார்த்துக்கொண்டு இருந்தது. கால்நடைகளை பகிர்ந்து கொண்டதை போன்று இந்தியாவும் எமது மக்களை சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் உள்வாங்கிகொண்டது.

இதனால் எங்கள் அரசியல் அதிகாரம் இலங்கையில் பலவீனமடைந்தது. அந்த சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் இல்லாவிட்டால் இன்று இலங்கை நாடாளுமன்றத்தில் 25 மலையகத் தமிழ் எம்.பிக்கள் இருந்திருப்போம். வடகிழக்கு தமிழ் சகோதர எம்.பிகளுடன் சேர்த்து இலங்கையில் 50 தமிழ் எம்.பிக்களுக்குக் குறையாமல் பலமாக இருந்திருப்போம். அப்படியானால், இலங்கையின் இனப்பிரச்சினை இந்தளவு மோசமடைந்து இருக்காது. இவை அனைத்துக்கும் ஆரம்பம், 1948இல் சுதந்திரத்தின் பின் மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை பறிப்பு, வாக்குரிமை பறிப்பு ஆகியவைதான்.

இலங்கையில் இருந்து இந்தியா போன மலையக மக்களை மீண்டும் இங்கு கூட்டி வர முடியாது. அவர்கள் வரவும் மாட்டார்கள். ஆனால், நாம் பலவீனமடைந்ததன் காரணமானாக எமது இனம் இந்நாட்டில் இழந்த கல்வி, சமூக, பொருளாதார உரிமைகள் எண்ணிலடங்கா. எமது பின்தங்கிய நிலைமைக்கும் இவையே காரணம்.

ஆகவே, பிரித்தானியா முன்வந்து, எமது இனம் இந்நாட்டில் நமது இனம் இழந்த உரிமைகளைப் பெற்றுத்தர உதவிட வேண்டும். இது தொடர்பில் மேலதிக பேச்சுகளை முன்னெடுக்கத் தமிழ் முற்போக்குக் கூட்டணியினராகிய நாம் தயார்.” – என்றார்.

### பண்டிகைக் காலத்தையொட்டி

ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் மற்றும் பாடசாலை விடுமுறை நாள்களில் சொந்த ஊர்களுக்குச் செல்லும் மக்களுக்காக விசேட பஸ் மற்றும் ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்படி நாளை முதல் நீண்ட தூர சேவைகளுக்காக 100 மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று இலங்கை போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

### நாடெங்கும்...

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

நாட்டில் போதைப்பொருள் வர்த்தகத்தையும் பாதாள உலகச் செயற்பாடுகளையும் ஒடுக்கும் நடவடிக்கைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பூரண ஆதரவு வழங்கியுள்ளார் எனவும், அதனால் எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் போதைப் பொருள் வர்த்தகத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

நாட்டுக்குப் பெரும் கேடாக விளங்கும் போதைப்பொருள் பாவனையையும் பாதாள உலக செயற்பாடுகளையும் ஒடுக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டிரான் அலஸ்,

“யுக்திய” என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் தடுப்பு சிறப்பு நடவடிக்கை குறித்து தற்போது நாடு முழுவதும் பேசப்படுகின்றது. இந்த நாட்டில் போதைப்பொருள் வர்த்தகமும் பாதாள உலகச் செயற்பாடுகளும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இவற்றை யாராவது நிறுத்த வேண்டும். எனவே, இதனை நிறுத்தத் தீர்மானித்தேன். அதற்காகத்தான் “யுக்திய” சிறப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இந்த விடயத்தில் சமூக பொலிஸ் குழுக்களுக்கும் விசேட பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நடவடிக்கை வெற்றியடைய மக்களின் ஆதரவும் குறிப்பாக ஊடகங்களின் ஆதரவும் அவசியம். முப்பது வருட யுத்தம் வடக்கு, கிழக்கில் மாத்திரமே இருந்தது. ஆனால், தற்போதுள்ள இந்த யுத்தம் நாடு பூராகவும் பரவியுள்ளது. இதனை முடிவுக்குக் கொண்டுவர பொதுமக்கள் வழங்கும் ஆதரவு பாதுகாப்புத் துறைக்கு பெரும் பலமாக அமைந்துள்ளது.

எனவே, இதற்குத் தேவையான ஆதரவையும் சரியான தகவல்களையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு முழுமையான ஒத்துழைப்பு கிடைத்தால் அடுத்த வருடம் ஜூன் மாதத்திற்குள் போதைப்பொருள் வர்த்தகத்தையும் பாதாள உலக செயற்பாடுகளையும் ஒழிக்க முடியும் என நான் நம்புகிறேன்.

அத்துடன், கடல் மார்க்கமாக இந்நாட்டுக்கு போதைப்பொருள் கொண்டு வருவதைத் தடுக்க விசேட செயல்திட்டமொன்றை கடற்படையினர் ஆரம்பித்துள்ளனர். முதலில், நாட்டில் இயங்கும் போதைப்பொருள் விநியோக வலையமைப்பை நிறுத்த வேண்டும். இரண்டாவதாக போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய பாதாள உலக செயற்பாடுகள் நிறுத்த வேண்டும்.

மூன்றாவதாக, போதைப்பொருட்களைப் பயன்படுத்துவோர் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். போதைக்கு அடிமையானவர்களுக்குப் பதிலாக போதைப்பொருள் வியாபாரிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை வழங்கினேன்.

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய 4 ஆயிரத்து 665 பேர் இருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் எமக்கு கிடைத்துள்ளன. இவர்கள் அனைவரையும் கைது செய்ய உத்தரவிட்டுள்ளேன். கடந்த 4 நாள்களில் மாத்திரம் புலனாய்வுத் துறை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 731 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். புலனாய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்படாத சந்தேக நபர்களும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொத்தமாக 8 ஆயிரத்து 451 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 346 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 61 பேர் சொத்து விசாரணைக்காகவும், 697 பேர் புனர்வாழ்வுக்காகவும் அனுப்பப்பட்டுள்ளனர்.

அத்துடன், கடந்த 4 நாள்களாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 43 கோடி 10 இலட்சம் ரூபா பெறுமதியான கஞ்சா, ஹஷிஸ், ஹெரோயின், ஐஸ், கஞ்சா உள்ளிட்ட பெருந்தொகை போதைப் பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்களுக்குச் சொந்தமான வாகனங்கள், வீடுகள் உள்ளிட்ட சொத்துக்களின் பெறுமதி சுமார் 16 கோடி 20 இலட்சம் ரூபாவாகும். எனவே, இதன் ஊடாக இந்த முயற்சி எவ்வளவு தூரம் வெற்றிகரமாக அமைந்துள்ளது என்பதை நீங்கள் அனைவரும் அறிந்துகொள்ளலாம். இவ்வாறு கைப்பற்றப்படும் அனைத்துப் பொருள்களையும் நீதிமன்றம் மூலம் அரசுடைமையாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தப் பணிகளை ஆரம்பிக்க முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடினேன். போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் பாதாள உலக செயற்பாடுகள் நாட்டிலிருந்து ஒழிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதியும் உள்ளார். எனவே ஜனாதிபதியின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் இந்த செயற்பாடுகள் எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் நிறுத்தப்பட மாட்டாது. அதேபோன்று, இதனை ஒரு வாரத்துடன் நிறுத்தாது தொடர்ந்து செயல்படுத்துவோம். இந்நாட்டில் போதைப் பொருள் மற்றும் பாதாள உலகச் செயற்பாடுகள் முழுமையாக நிறுத்தப்பட்டு, எதிர்கால சந்ததியினர் அச்சமோ சந்தேகமோ இன்றி வாழக்கூடிய சூழலை நாம் உருவாக்குவோம்.

சிறுவர்கள், பெண்கள் மீதான துஷ்பிரயோகம் தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இந்த முறைகேடுகளைத் தடுக்கும் வகையில், எதிர்வரும் ஜனவரி முதல் வாரத்தில் இருந்து பாதுகாப்புத் துறைக்கு அவசர தொலைபேசி எண் ஒன்றை அறிமுகப்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளேன். எனவே, இந்த விசேட தொலைபேசி எண்ணின் கீழ் பெண் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள். பெரும்பாலும் பெண்கள் தங்கள் பிரச்சினைகளை ஆண் பாதுகாப்புத் துறை அதிகாரிகளிடம் கூறத் தயங்குகிறார்கள்.

எனவே, 24 மணி நேரமும் இயங்கும் இந்த செயற்பாட்டு அறையில், பெண் காவலர்களை மாத்திரம் பணியமர்த்தப்படுவார்கள். இது தவிர, தமிழில் முறைப்பாடுகளை அளிக்கக்கூடிய வகையில் மேலுமொரு புதிய எண்ணை அறிமுகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.”

– என்றார்.





# மூன்று மாணவிகளைத் துஷ்பிரயோகம் செய்த சந்தேகத்தில் விஞ்ஞான ஆசிரியர் கைதானார்!

**(மஸ்கெலியா நிருபர்)**

நுவரெலியா மாவட்டத்தில் 9 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மூன்று மாணவிகளை பாடசாலையின் ஆய்வு கூடத்தில் வைத்து துஷ்பிரயோகம் செய்தார் என்ற சந்தேகத்தில் அதே கல்லூரியின் விஞ்ஞான ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிதுல்லே பல்லேதோவ பிரதேசத்தில் வசிக்கும் 29 வயதுடைய திருமணமான ஆசிரியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

9 ஆம் வகுப்புக்கு பொறுப்பான ஆசிரியரும் அவரே என்றும், அவர் விஞ்ஞான பாடத்தைக் கற்பிப்பவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ஆசிரியர் மாணவி ஒருவருடன் காதல் உறவில் ஈடுபட்டுள்ளதுடன், அந்த மாணவி ஊடாக ஏனைய இரு மாணவிகளையும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளார் என்றும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மாணவிகளிடம் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட ஆசிரியை கைது செய்யப்பட்டுள்ளார். மாணவி ஒருவரிடம் 'வாட்ஸ்அப்' மூலம் நிர்வாணப் புகைப்படங்களை கேட்டு வற்புறுத்தியிருப்பதும் தெரியவந்துள்ளது.

ஆசிரியரின் கையடக்கத் தொலைபேசி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட ஆசிரியர் இன்று (21) வலப்பனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். மாணவிகள் மூவரும் சட்ட வைத்திய பரிசோதனைக்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அநுருத்த பண்டார ஹக்மன மற்றும் வலப்பனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் அனுர பண்டார ஆகியோரின் ஆலோசனையின் பேரில், மேலதிக விசார ணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

# நாவலமுல்லவில் போதை மாத்திரை விற்பனை செய்த நபர் கைதானார்!

**(அஸ்ஹஉர் இப்றாஹிம்)**

மீகொட, நாவலமுல்ல பிரதேசத்தில் உள்ள பாடசாலை வீதியில் பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு போதை மாத்திரைகளை விற்பனை செய்து வந்த சந்தேக நபரொருவர் 50 போதை மாத்திரைகளுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மீகொட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நெவில் பிரியந்தவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஹோமாகம நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பாவம், நாடும் மக்களும்!

போதைப்பொருள் சம்பந்தப்பட்ட கடத்தல் காரர்கள், வர்த்தகர்கள், முகவர்கள், பாவனையா ளர்கள் மற்றும் பாதாள உலகக் கும்பல்களைச் சேர்ந்தோருக்கு எதிராகப் பெரும் போர் ஒன்றை பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் முன்னெடுத்திருக்கின்றனர் என்ற பரபரப்பை - ஆரவாரத்தை - பொதுமக்கள் பாதுகாப்பு விவகார அமைச்சர் டிரான் அலஸும், அவரின் பரிந்துரையில் பதில் பொலிஸ்மா அதிபராக நியமனம் பெற்றி ருக்கும் தேசபந்து தென்னக்கோனும் ஒருபுறம் கிளப்பி வர -

மறுபுறத்தில், பொலிஸ் அதிகாரியாக இருந்த கொண்டு, முன்னாள் படைவீரர் ஒருவரைக் கைது செய்து சித்திரவதைக்கு உட்படுத்தியவர் என்று உயர் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப் பட்டவர், பல்வேறு சட்டமீறல் வழக்குகளை எதிர் கொண்டிருப்பவர் நாட்டின் பொலிஸ் துறைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டமை அரசமைப்பை மீறிய நடவடிக்கை என்ற குற்றச்சாட்டும் பர பரப்பாகவும் தீவிரமாகவும் வெளிப்பட்டு வரு கின்றது.

முதலாவது பரபரப்பிலும் ஆரவாரத்திலும் இரண்டாவது விடயத்தினால் ஏற்பட்டுள்ள பின்ன டைவை மூடி மறைத்து விடலாம் என்ற ஆட்சி தரப்பின் எண்ணம் வெற்றி அளிக்கவேயில்லை என்றே கூற வேண்டும்.

குற்றம் இழைத்தவர் - அதுவும் சித்திரவதை என்ற மோசமான அடிப்படை உரிமை மீறல் குற்றம் இழைத்தவர் என உயர் நீதிமன்றத்தினால் அடையாளம் காணப்பட்டவர் - பதில் பொலிஸ்ம அதிபர் பதவியில் நீடிப்பதற்கு எதிராக அரசையும், அரசுத் தலைவரையும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரையும், இத்தகைய நியமனங்களை உறுதிப்படுத்தும் அரசமைப்புக் கவுன்ஸிலையும் கண்டித்து கருத்துக்கள் வலுவாக வெளிவர ஆரம் பித்துள்ளன.

அடிப்படை உரிமைகளை மீறிய அல்லது குற்ற வியல் வழக்குகளை எதிர்கொள்கின்ற அல்லது சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர் என்று கூறப்படுகின்ற எந்த ஓர் அதிகாரியையும் பொலிஸ்மா அதிபராக நியமிக்கக் கூடாது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நேற்றுப் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றது.

அதிகாரிகளை அகற்றுவது தொடர்பான 2002 இன் ஐந்தாம் இலக்கச் சட்டத்தின்படி பொலிஸ்மா அதிபர் பதவியில் இருப்பவருக்கு பதவிக்காலம் முழுவதும் பாதுகாப்பு கவச அரண் உண்டு. அத்த கைய ஒரு பதவியில் தவறானவரை அமர்த்தி, அவர் இழைத்த குற்றங்களில் இருந்து பாதுகாப்பு அரண் கொடுத்துக் காப்பது மிகப்பெரும் தவறு என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்யா நவரத்தின சுட்டிக் காட்டி இருக்கின்றார்.

பதில் பொலிஸ்மா அதிபர் நியமனத்தை எதிர்த்த சில சட்டத்தரணிகள் தற்போது போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்காக நீதிமன்றங்களில் முன்னிலையாகின்றனர் என்ற சாரப்படவும் -

போதைப்பொருள் விவகாரங்களில் சந்தேகத்துக் குரியவர்கள் பொலிஸாரின் கைகளில் என்கவுண் டர்களில் கொல்லப்படுகின்றமை நியாயமானது என்று அர்த்தத்திலும் -

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கருத்து வெளியிடுகின்றமையை ஊடகங்கள் வாயிலாக அறிய முடிந்திருப்பதாக சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சுட்டியுள்ளார்.

குற்றம் இழைத்தவர்கள் என்று சந்தேகப்படும் தரப்புக்கள் உட்பட எந்தத் தரப்புக்காகவும் சட்டத்தரணிகள் முன்னிலையாகின்றமை சட்ட நியதியில் மறுக்கப்பட முடியாத ஓர் அம்சம்.

அதேசமயம் பொலிஸ் காவலில் 'என்கவுண்டர்' என்ற பெயர்களில் ஆள்களை முடிப்பது மிகப்பெரிய சட்டவிரோதக் கொலைக் குற்றம்.

சட்டத்தின் அடிப்படையான முதலாவது உரிமையை மறுத்தும், அநீதி நடவடிக்கையான இரண்டாவது குற்றத்தை நியாயப்படுத்தியும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கருத்து வெளி யிட்டிருந்தால் -

குற்றமிழைத்த காரணத்துக்காக பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தேசபந்து தென்னக்கோன் எவ் வாறு பொருத்தமற்றவராகிப் போகின்றாரோ அதே போல பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பதவிக்கு டிரான் அலஸும் பொருத்தமற்றவராகிப் போகின் றார் என்றே அர்த்தம்.

இவ்வாறு தத்தமது பதவிகளில் இருப்பதற்கு அதிகாரமும் பொருத்தமும் அற்றவர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்குப் பொறுப்பான பதவிகளில் இருந்தால், நாட்டில் சட்டமும் ஒழுங்கும் உருப்பட்ட மாதிரித்தான். நீதியும் நியாயமும் நிலைப்பட்ட மாதிரிதான்....!

பாவம், நாடும் மக்களும்.

# யாழ்.இந்து ஆரம்ப மாணவர்கள் சர்வதேச சதுரங்கத்தில் சாதனை!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை சதுரங்க சங்கத்தின் அனுசரணையில் யாழ்ப்பாண மாவட்ட சதுரங்க சங்கம் யாழ்ப்பாணம் செல்வா பலஸில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சர்வதேச சதுரங்க போட்டியில் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்கள் இருவர் தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

பாடசாலை மாணவர்களான அ. அயோதிசன் சம்பியனாகவும், ச. சிவசரணிகை இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.





# சாவகச்சேரி சத்திர சிகிச்சைக் கூடத்தை ஜனவரியில் இயங்க வைக்க நடவடிக்கை

(த.சுபேசன்)

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் நிர்மாணிக்கப்பட்ட சத்திர சிகிச்சைக் கூடத்தை எதிர்வரும் ஜனவரி மாதம் இயங்க வைப்பதற்கான நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை யில் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, சத்திர சிகிச்சைக் கூடம் ஆகியன நிர்மாணிக்கப்பட்டன.

எனினும் ஆளணிப் பற்றாக்குறை மற்றும் மருத்துவ உபகரண தேவைப் பாடு காரணமாக சத்திர சிகிச்சைக் கூடத்தை இயங்க வைக்க முடியாத நிலை காணப்பட்டது.

இந்த நிலையில் கடந்த வருடம் தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் மற்றும் ரோட்டரிக் கழகம் ஆகியன இணைந்து மருத்துவ உபகரண தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தி ருந்தன. ஆளணிப் பற்றாக்குறை காரணமாக வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக் கூடத்தை இயங்க வைக்க முடியாத நிலை காணப்பட்டது.

இந்த நிலையில் அண்மையில் தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் வைத்திய சாலைக்கு வரவழைக்கப்பட்டு சத்திர சிகிச்சைக் கூடத்தை விரைவில் ஆரம் பிப்பது தொடர்பாக கலந்துரையாடப் பட்டது.

கலந்துரையாடலின் விளைவாக எதிர்வரும் ஜனவரி மாதம் வைத்திய சாலையின் ஆளணிப் பற்றாக்குறை உள்ளிட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து சத்திர சிகிச்சைக் கூடத்தை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் கனகேஸ்வரன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப் பாளர் வைத்தியக் கலாநிதி சத்திய மூர்த்தி, பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் கேதீஸ்வரன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண் டனர்.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் சத்திர சிகிச்சைக் கூடங்கள் இயங்கத் தொடங்கினால் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதன வைத்தி யசாலைக்கு அனுப்பி வைக்கப்படும் சந்தர்ப்பங்கள் குறையும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

இதனூடாக பளை தொடக்கம் நாவற்குழி வரையான மக்கள் மற்றும் பூநகரி பிரதேச மக்கள் பயனடைய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





# சுவாமி விவேகானந்தா கலாசார நிலைய பணிப்பாளர் யாழ். பல்கலைக்கு விஜயம்

இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அங்குரன் தத்தா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் விஜயம் செய்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்கள், இந்து கற்கைகள் பீட மாணவர்களுடனும் அவர் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது துறைத் தலைவர், விரிவுரையாளர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணம் சர்வதேச திரைப்பட விழா நிகழ்வுகளிலும் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் பணிப்பாளர் பங்கேற்றிருந்தார்.







# தம்பலகாமம் பிரதேசத்தில் பகிர்வோம் மகிழ்வோம் நிகழ்வு

(திருகோணமலை)

திருகோணமலை சேகர மெத்தடிஸ்ட் தேவாலயம் சார்பில் பகிர்வோம் மகிழ் வோம் நிகழ்வு தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்றது.

ஜெயபுர சிங்கள வித்தியாலயம், சிவசக்தி தமிழ் கலவன் பாடசாலை மற்றும் ஸ்ரீ ராமகிருஷ்ண தமிழ் வித்தி யாலயம் ஆகிய பாடசாலைகளது மாண வர்கள் இதில் கலந்து கொண் டனர்.

திருகோணமலை மெதடிஸ்த தேவா லயங்களின் சேகர முகாமை குரு அருள்பணி எஸ்.டபிள்யூ. தேவகுமார், அருள்பணி திருமதி டெய்சி தேவகுமார், அருள்பணி சுயதாசன், தேவாலய ஊழியர்கள், உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற் றும் மாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.



திருகோணமலை மெதடிஸ்த தேவாலயங்களின் உறுப்பினர்கள் இந்தப் பாடசாலை மாணவர்களுக்கு ரூபா ஒரு லட்சத்து அறுபதாயிரம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங் களை வழங்கினர்.

# நற்பிட்டிமுனையில் கௌரவிப்பு நிகழ்வு





(பாறுக் ஷிஹான்)

நற்பிட்டிமுனை அல்-கரீம் பவுண் டேஷனின் சாதனையாளர்களைக்கௌர விக்கும் விழா சவளக்கடை றோயல் காடன் பகுதியிலுள்ள மர்ஹூம் ஏ.எல். எம் பளீல் நினைவரங்கில் நடைபெற்றது.

இதன்போது 2023 தரம் 5 புலமைப் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற 12 மாணவர்கள், கற்பித்த ஆசிரி யர்கள், அதிபர்கள் ஆகியோர் நினைவுச் சின்னம் மற்றும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் புதிதாக அதிபர் சேவையில் இணைந்து கொண்ட பெண் அதிபர்களான அஸீஸ் றெஜினா, அப்துல் கபூர் தஸ்லீமா மற்றும் 2023 இல் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தி யடைந்த 9 மாணவர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

நற்பிட்டிமுனை அல்-கரீம் பவுண் டேஷனின் பணிப்பாளர் சி.எம் ஹலீம் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பா ளர் சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாகவும் அம்பாறை மாவட்ட பொது வைத்திய சாலை வைத்தியர் எம்.எப்.எம் நிஹாத் கௌரவ விருந்தின ராகவும் கல்முனை மாநகர சபை முன் னாள் உறுப்பினரும் நற்பிட்டிமுனை அல்-கரீம் பவுண்டேஷ னின் தவிசாள ருமான சி.எம் முபீத் மற்றும் அதிபர்க ளான எம்.எல்.பதியு தீன், சி.எம்.நஜீப், திருமதி ஏ.எம்.முனா ஸிர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# மாணவரைக் கௌரவிக்கும் நிகழ்வு





(எம். எப். நவாஸ்)

ஏறாவூர் அல்முனீறா பாலிகா மகா வித்தியாலயத்தில் இருந்து இந்த வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்டைக்குத் தோற்றி வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற 15 மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் என். எம். மகாத் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு அதிதிகளாக மட்டக்களப்பு மத்தி வலய நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஜே.எவ். றிப்காஸு, சமூக நலன் அபிவிருத்தி ஒன்றியத்தின் பொருளாளர் அ.ற.வஸீம் அக்ரம் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.





# பாணந்துறைக் கரையோரம் சிரமதானம் மூலம் துப்புரவு

## கொழும்பு பல்கலைக்கழக தொழில் நுட்பப் பிரிவினர் பங்களிப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கொழும்பு பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட மாணவர்களின் சுற்றாடல் தொழில்நுட்ப சங்கத்தின் ஏற்பாட்டில் கடற்கரையோரம் பேணல் தொடர்பான சிரமதான நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பூர்ணா பியதிலக தலைமையில் பாணந்துறை கடற்கரை பிரதேசத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட மாணவர்களும், விரிவுரையாளர்களும் பங்கேற்றனர்.





# கற்பிட்டியில் பரிசளிப்பு நிகழ்வு

**(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ் )**

கற்பிட்டி அஹதியா பாடசாலையின் தவணைப் பரீட்சை நிறைவடைந்துள்ள நிலையில் செயற்பாட்டு ரீதியான கற்பித்தல் முறைகளில் மாணவர்களின் அடைவு மட்டத்தை மதிப்பீடு செய்து பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

குர்ஆன் ஓதுதல், அரபு எழுத்தணி, துஆ மனனம் ஆகிய செயற்பாட்டு ரீதியான மதிப்பீட்டில் திறமைகளை வெளிக்காட்டிய மாணவர்களில் இருந்து முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கும் மற்றும் பரீட்சையில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.ஐ சித்தி நிஹார தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஒவ்வொரு வகுப்பில் இருந்தும் ஒன்பது மாணவர்கள் வீதம் மொத்தமாக 90 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.




# பெண் தலைமைக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கல்

**(ஹஸ்பர்)**

கிண்ணியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிக்கான சுய தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கிண்ணியா பிரதேச செயலர் எம்.எச்.ஹனி தலைமையில் இன்று (21) பிரதேச செயலக வளாகத்தில் வைத்து இவை வழங்கப்பட்டன.

மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் மற்றும் விதவைகளுக்கான சுய தொழில் திட்டத்தில் 7 பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.



வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அதன் மூலம் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதில் கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், தலைமை முகாமையாளர்கள், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் எனப் பலர் கலந்து கொண்டனர்.




# மருதமுனையில் சமூக அபிவிருத்திக்கான ஸ்தாபனமாக ‘பிரண்ட்ஷிப் போரம்’ ஸ்தாபிப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை பிரதேசத்தில் சமூக அபிவிருத்திக்கான ஸ்தாபனமாக ‘பிரண்ட்ஷிப் போரம்’ ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ‘நல்லதெனில் நன்றே செய்தல்’ எனும் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு கடந்த காலத்தை முன்னிறுத்தி எதிர்காலத்தை கட்டி எழுப்புவோம் எனும் வாசகத்தின் கீழ் ஒரு புதிய சக்தியாக இளைஞர்கள் ஒன்றிணைந்து பிரண்ட்ஷிப் போரம் எனும் சமூக அபிவிருத்திக்கான ஸ்தாபனத்தை நிறுவியுள்ளனர்.

இதன் தொடக்க விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவரான ஊடகவியலாளர் ஏ.எல்.எம்.ஷினாஸ் தலைமையில் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் மருதூர்கனி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கல்முனை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றினார்.

மருதமுனை பிரதேசத்தின் கல்வி, கலை, கலாசாரம், பொருளாதார, சமய, சமூகம் சார் அபிவிருத்தி விடயங்களில் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு முறையை உருவாக்குதல், துறை சார்ந்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் மற்றும் சேவையாற்றி ஓய்வு நிலையில் உள்ள அதிகாரிகளை நன்றி உணர்வுடன் பாராட்டி கௌரவித்தல், திறமைகளை வெளிப்படுத்திச் சாதனைகளை நிலைநாட்டும் மாணவச் செல்வங்கள் மற்றும் துறை சார்ந்தவர்களை ஏனையவர்களுக்கு முன்மாதிரியாக பாராட்டி கௌரவித்தல் போன்ற நிகழ்வுகளையும் பிரண்ட்ஷிப் போரம் முன்னெடுக்கவுள்ளது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் பி.எம்.ஜவ்பர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பணிப்பாளர் அல்ஹாஜ் பஷீர் அப்துல் கையூம், மருதமுனை ஜம்இய்யதுல் உலமா சபை தலைவர் அஷ்செய்க் எப்.எம்.ஏ. அன்ஸார் மௌலானா, மூத்த ஊடகவியலாளரும் மருதமுனை ஊடக பேரவையின் தலைவருமான எம்.எல்.எம்.ஜமால்தீன், ரி.எம். நியூஸ் ஊடக வலையமைப்பின் ஆலோசகர் எஸ்.எம்.எம்.அன்ஸார், சட்டத்தரணி எம்.எம்.எம்.முபீன் உட்பட அதிபர்கள், ஊர் பிரமுகர்கள், போரத்தின் அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.





# அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப நிறுவன ஸ்தாபகர் சிரார்த்த தினம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஸ்தாபகர் கனடாவைச் சேர்ந்த ஈவன் ஏ ஹாடியின் 60 ஆவது சிரார்த்த தின நிகழ்வுகளும், அன்னதானமும் அண்மையில் நிறுவன வளாகத்தில் நடைபெற்றன.

நிறுவன நிர்வாகத்தினர், விரிவுரையாளர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பொது மக்கள் இதில் நிகழ்வில் பங்கேற்றனர்.





# இரு ஆசிரியர்களுக்கு சேவை நலன் பாராட்டு!

சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் சிறப்பாக பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களான ரி.காண்டீபன் மற்றும் எஸ். ரதிதேவன் ஆகியோருக்கான சேவை நலன் பாராட்டு விழா பாடசாலை அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (19) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்வி பணிமனையின் பாடசாலை வலுவூட்டல் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி. சகாதேவராஜா கலந்து கொண்டார்.

வாழ்த்துப்பா பாடி வாழ்த்து மடல் மற்றும் பரிசுகள் வழங்கி வைக்கப் பட்டனர்.



உதவிக்கல்விப் பணிப்பாளர் வி. ரி.சகாதேவராஜா சிறப்புரையாற்றினர்.

சிரேஷ்ட ஆசிரியர் ந.கோடீஸ்வரன் நன்றியுரையாற்றினார்.



# போக்குவரத்துப் பொலிஸாருக்கு செஞ்சிலுவை முதலுதவிப் பயிற்சி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கொழும்பு பிரதேசத்தில் போக்குவரத்து கடமையில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோஸ்தர்களுக்கு மூன்று நாள் முதலுதவி சிகிச்சை பயிற்சி முகாமொன்றை ஒழுங்கு செய்திருந்தது.

கொட்டாவையில் அமைந்துள்ள இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் பயிற்சி முகாமில் பங்கேற்ற பொலிஸ் அதிகாரிகளுக்கான சான்றிதழ்களும், சின்னங்களும் பயிற்சியின் இறுதியில் வழங்கப்பட்டன.



# கல்லடி இக்னேசியஸ் வித்தியாலயத்தில் ஒளிவிழா!





(பழுவூரான்)

மட்டக்களப்பு, கல்லடி, புதுமுகத் துவாரம் புனித இக்னேசியஸ் வித்தியாலய வருடாந்த ஒளிவிழா இன்று வியாழக்கிழமை (21) வித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் பி.தங்கவேல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக புது முகத்துவாரம் இக்னேசியஸ் தேவாலய பங்குத் தந்தை வணபிதா ரி.லோரன் ஸூம், சிறப்பு விருந்தினராக மட்டக்களப்பு கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை மேம்பாட்டு உத்தியோகத்தர் டினேஸ் கிறிஸ்டி மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மாணவர் படையணிப் பொறுப்பதிகாரி எஸ். நிலாம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர்களின் ஆடல், பாடல், நத்தார் செய்தி, நத்தார் தாத்தாவின் வருகை எனப் பல்வேறு நிகழ்வுகள் அரங்கேறின. அத்தோடு மாணவர் மத்தியில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

ஒளி விழாவில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



# கிளிநொச்சி மாவட்டத்தில் புதிய சாரணிய அமைப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் புதிதாகத் தோற்றம் பெற்ற எயார் ரோவர் சாரணிய அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

சாரணியத்தின் மூலம் இளம் சந்ததியினர் மத்தியில் இனங்களுக்கிடையிலான நல்லுறவு, சிறந்த தலைமைத்துவம், வாழ்கையை முன்னெடுத்துச் செல்வதற்கான நுட்பம், தன்னார்வம், முதன்மை ஊக்கம், பண்பாடு, முதியவரை மதித்தல், நல்லொழுக்கம் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில் இந்த நிகழ்வு கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

கிளிநொச்சி மாவட்ட சாரண ஆணையளர் பிரேம்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதிப் பிரதம சாரண ஆணையாளர் எம்.எப்.எஸ்.முஹித் பிரதம அதிதியாகவும், இரணமடு இராணுவ படை முகாம் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் எம்.பி.எஸ்.மாரப்பெரும, உதவி தலைமையக ஆணையாளர் எஸ்.அமல்ராஜ், கிளிநொச்சி இந்துக் கல்லூரி அதிபர் என்.சர்வேஸ்வரன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் உதவி மாவட்ட ஆணையாளர் என்.ஜெகதீஸ்வரன் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.





# மன்னார் மாவட்டத்துக்கு புதிய அரச அதிபர் நியமனம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மன்னார் மாவட்ட அரச அதிபராகக் கே.கனகேஸ்வரன் பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சின் செயலாளர் ரஞ்ஜித் அசோகவால் நிமிக்கப்பட்டுள்ளார்.

நியமனக் கடிதம் கையளிக்கும் நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் கலந்து கொண்டார்.

1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டுவரை கொடிகாமம் போகட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியராகவும், 2003 முதல் 2004 வரை நிர்வாக சேவை பயிற்சியிலும், 2004 தொடக்கம் 2015 வரை தொழில் திணைக்கள பிரதி



தொழில் ஆணையாளராகவும், 2015 தொடக்கம் 2019 வரை மருதங்கேணி பிரதேச செயலாளராகவும், 2019 ஓகஸ்ட் முதல் 2019 டிசெம்பர்வரை யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபராகவும், 2019 டிசெம்பர் முதல் 2023 வரை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபராகவும், 2023 நவம்பர்வரை வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.



# புத்தளம் பிரதேசத்தில் கரடி தாக்கி படுகாயமடைந்துள்ள இளைஞன்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மொனராகல, புத்தள பிரதேசத்தில் நிலக்கடலை விவசாய காணியிலுள்ள குடிசையில் வசித்து வந்த இளைஞர் ஒருவர் கரடி தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார்.

இந்த நிலையில் பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என்று வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி டாக்டர் பாலித்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

புத்தல – கதிர்காமம் வீதிக்கருகில் உள்ள நிலக்கடலை தோட்டத்திலுள்ள குடிசையில் நண்பர்களுடன் இருந்த போது திடீரென குடிசைக்குள் நுழைந்த கரடி அங்கிருந்தவர்கள் மீது பாய்ந்து தாக்கியுள்ளது. சிலர் அருகிலிருந்த மரத்திலேறி தப்பியுள்ளனர். பின்னர் நண்பர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கரடியை அடித்து விரட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# திருமலை நிலாவெளி புறாத் தீவு தாற்காலிகமாக பூட்டப்பட்டுள்ளது!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை நிலாவெளி கடற்பகுதியில் அமைந்துள்ள புறாத்தீவு தேசிய பூங்கா தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்று வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் அறிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழை ஆரம்பமாகியுள்ள நிலையில் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. அலையின் வேகமும் அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு பெப்ரவரி இறுதி வரை இந்த நிலமை நீடிக்கும் என்றும் இதற்கிடையில் கடல் சீரடையும் நாள்களில் சுற்றுலா பயணிகள் தீவுக்குச் செல்ல அனுமதிக்கப்படலாம் என்றும் உயர் அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

# எம்.பி.க்கள் இடைநீக்கம் விவகாரம்: எதிர்க்கட்சியினர் எதிர்ப்பு ஊர்வலம்




நாடாளுமன்றத்தில் இருந்து 143 எம்.பிக்கள் இடைநீக்கம் செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து,'ஜனநாயகத்தைக் காப்பாற்றுங்கள்' என்ற பதாகை ஏந்தி எதிர்க்கட்சியினர் இன்று பழைய நாடாளுமன்ற கட்டடத்தில் இருந்து டெல்லியில் உள்ள விஜய் சவுக் வரை ஊர்வலமாக சென்றனர்.

நாடாளுமன்றத்தின் மக்களவையில் கடந்த 13 ஆம் திகதி 2 பேர் பார்வையாளர் மாடத்தில் இருந்து குதித்து வண்ண புகை குப்பிகளை வீசி அத்துமீறலில் ஈடுபட்டனர். இதுகுறித்து அவையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா விளக்கம் அளிக்க கோரி எதிர்க்கட்சி எம்.பிக்கள் தொடர் அமளியில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து கடந்த வாரம் முதல், மக்களவையில் இருந்து 97 எம்.பிகள், மாநிலங்களவையில் இருந்து 46 எம்.பிகள் என 143 பேர் மொத்தமாக இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சித் தலைவர்கள் பழைய நாடாளுமன்ற கட்டிடத்தில் இருந்து மத்திய டில்லியில் உள்ள விஜய் சவுக் வரை 'ஜனநாயகத்தை காப்பாற்றுங்கள்' என்ற பதாகை ஏந்தி ஊர்வலமாக சென்றனர். அப்போது எம்.பிக்கள் கைகளில் 'எதிர்க்கட்சி எம்.பிக்கள் இடைநீக்கம். இது ஜனநாயகத்தின் முடிவா?' 'நாடாளுமன்றத்தில் ஜனநாயகம் கூண்டோடு வெளியேற்றம்' என்ற பதாகைகளையும் கைகளில் வைத்திருந்தனர்.

இந்த ஊர்வலத்தின் போது செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கூறுகையில்,

"நாங்கள் நாடாளுமன்ற அத்துமீறல் குறித்து கேள்வி எழுப்ப விரும்புகிறோம். மக்களவை சபாநாயகர், மாநிலங்களவைத் தலைவரிடம் நாங்கள் தொடர்ந்து பாதுகாப்பு அத்துமீறல் குறித்து பேச அனுமதிக்குமாறு தொடர்ந்து கோரி வருகிறோம். பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சரும் பாதுகாப்பு அத்துமீறல் குறித்து அவை யில் பேசியிருக்க வேண்டும்.

ஆனால், பிரதமர் மோடி வேறு இடங்களில் பேசுகிறார் மக்களவை, மாநிலங்களவையில் பேசவில்லை. இது நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறிய செயல்" என்று தெரிவித்தார்.

இதேவேளை, எம்.பிகளின் இடைநீக்கத்தைத் எதிர்த்து வெள்ளிக்கிழமை ஜந்தர்மந்தரிலும், நாடுதழுவிய அளவிலும் போராட்டம் நடத்த இருப் பதாக எதிர்க்கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் மத்திய அரசின் செயல் ஜனநாயகத்தின் படுகொலை என்றும் எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் மசோதாக்களை நிறை வேற்ற எதிர்க்கட்சிகள் இல்லாத நாடாளுமன்றத்தை உருவாக்க நினைக்கிறார்கள் என்றும் குற்றம்சாட்டினர்.

# இந்திய பொதுத் தேர்தல் வரை வெங்காய ஏற்றுமதி தடை நீக்கப்படாது



இந்தியா வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளதால், வெங்காயத்தின் மொத்த விற்பனை விலை 50 சதவீதம் வரை குறைவடைந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

39 - 40 இந்திய ரூபாயாக இருந்த ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் மொத்த விலை தற்போது 20-21 இந்திய ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இதேவேளை, அடுத்த ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி வரை வெங்காய ஏற்றுமதிக்கு இந்தியா அதிகாரபூர்வமாக தடை விதித்துள்ளது.

ஆனால் அடுத்த இந்திய பொதுத் தேர்தல் வரை தடை நீக்கப்படாது என்று இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடையால், இந்தியாவில் வெங்காயத்தின் விலை வீழ்ச்சியடைந்தாலும், ஆசிய மக்கள் இதனால் அவதிப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தடை காரணமாக ஆசியாவில் வெங்காயத்தின் விலை வேகமாக உயர்ந்துள்ளதாகவும் இதன் காரண மாக ஆசிய மக்கள் அதிகளவு காய் கறிகளை கொள்வனவு செய்ய தூண்டப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இஸ்ரேல் - ஹமாஸ் மோதல்: 20 ஆயிரம் பேர் உயிரிழப்பு





இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தரப்பினருக்கு இடையிலான மோதல் ஆரம்பித்ததில் இருந்து 20 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் என காசா தெரிவித்துள்ளது. கடந்த ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி மோதல் ஆரம்பித்ததில் இருந்து பொதுமக்கள் உட்பட பலர் கொல்லப்பட்டு வருகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஹமாஸ் மற்றும் எகிப்திற்கு இடையேயான பேச்சுவார்த்தையில் எந்தவித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், காசாவில் அவசர மனிதாபிமான இடைநிறுத்தங்களுக்கான அழைப்புகளை ஐக்கிய நாடுகள் சபை ஒத்திவைத்துள்ளது.

# சீனாவை உலுக்கிய நிலநடுக்கம்: உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிப்பு



வடமேற்கு சீனாவின் கன்சு, குயின்காங் ஆகிய மாகாணங்களில் நேற்று முன்தினம் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்ட நிலையில் தற்போது உயிரிழந்தோரின் எண்ணிக்கை 134 ஆக உயர்ந்துள்ளது.

இந்த நிலநடுக்கமானது, ரிக்டர் அளவுகோலில் 6.2 புள்ளிகளாக பதிவானதோடு தென் சீனக்கடலுக்கு அடியில் 10 கி.மீ ஆழத்தில் உருவானதாக சீன வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இதனால் சீனாவில் கடந்த 9 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இது பாதிப்பை ஏற்படுத்தியது, 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் சேதம் அடைந்தன.

மேலும், கட்டட இடிபாடுகளில் சிக்கி 127 பேர் பலியாகியுள்ளனர் என செய்திகள் வெளியாகி இருந்தன.

இந்த நிலையில் பலி எண்ணிக்கை 134 ஆக உயர்ந்துள்ளதாகவும், 980 பேர் காயமடைந்துள்ளதாகவும் அந்த நாட்டின் பேரிடர் மீட்புத்துறை தெரிவித்துள்ளது.

அத்தோடு, ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மாயமாகி உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது.

இதற்கிடையே நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட சீனாவுக்கு உதவ தைவான் முன்வந்துள்ளது, தைவான் அதிபர் சாய் இங்-வென் தனது வலைத்தள பக்கத்தில், "கடினமான இயற்கை பேரிடர் மீட்பு பணியில் சீனாவுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க தைவான் தயாராக உள்ளது" என்று கூறியுள்ளார்.

சுயாட்சி பெற்ற நாடாக தன்னை தைவான் அறிவித்தாலும், சீனா அந்த நாட்டின் மீது முழு உரிமை கொண்டாடி வருகிறது.

இதனால் சீனாவிற்கும் தைவானுக்கும் இடையே பதற்றம் நிலவி வரும் சூழலில், சீனா தனது உரிமையை நிலைநாட்ட தைவானின் வான்வெளியிலும், நீர்பரப்பிலும், தனது இராணுவ ஆதிக்கத்தை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


## புதிய கொவிட் வேகமாக பரவல்: சுகாதார வல்லுநர்கள் எச்சரிக்கை

புதிய ஒமிக்ரோன் பிறழ்வு வேகமாக பரவி வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தியா, சீனா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் ஜே.என். 1 பிறழ்வு கண்டறியப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மக்களுக்கான ஆபத்து தற்போது குறைவாக உள்ளதாகவும் தற்போதைய தடுப்பூசிகள் தொடர்ந்தும் பாதுகாப்பை வழங்குவதாக உலக சுகாதார ஸ்தாபனம் கூறியுள்ளது.

எனினும், குளிர்காலத்தில் கொரோனா மற்றும் பிற நோய் தொற்றுகள் அதிகரிக்கலாம் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.







# திருகோணமலை கலை இலக்கியப் பெருவிழா

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்டக் கலை இலக்கியப் பெருவிழா மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி தலைமையில் நேற்று முன்தினம் (19) மாவட்ட செயலக புதிய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

பாரம்பரிய கலை கலாசார அம்சங்கள் மறைந்து வரும் தருணத்தில் அவற்றுக்கு புத்துயிர் வழங்கும் நோக்கில் இந்தக் கலை இலக்கிய பெருவிழா நடைபெற்றது.



வரவேற்பு நடனம், சிங்கள நடனம், கதை சொல்லுதல், சிங்கள கிராமிய நடனம், சிங்கள பாடல், தமிழ் பாடல், மேலைத்தேய நடனம் போன்ற பல கலாசார நிகழ்வுகள் மூலம் தமது திறமைகளை மாணவர்கள் மட்டுமின்றி மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் வெளிக்காட்டியிருந்தனர்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வருடாந்தம் நடத்தப்படும் இலக்கியப் போட்டி தொடர்பாகத் திருகோணமலை மாவட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் திறந்த பிரிவில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் இதன் போது மாவட்ட அரச அதிபரால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மேலதிக மாவட்ட அரச அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட செயலகப் பதவி நிலை அதிகாரிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.





# அட்டாளைச்சேனையில் கலை இலக்கிய விழா

(எம். எப்.நவாஸ்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகம் இணைந்து நடத்தும் பிரதேச கலை இலக்கிய விழா அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலர் சட்டத்தரணி நஹீஜா முஸாபீர் தலை மையில் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக பிரதேச செயலர் எம். ஏ. சி. அகமது ஷாபிர், ஏனைய அதிதிகளாகக் கணக்காளர் எஸ். எல். நிபாஸ், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எல். மஜித், சமுர்த்தித் தலைமை முகாமையாளர் ஏ. எம். ஹமீட், முகாமையாளர் எஸ். எல். அஸீஸ், மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் ரீ. எம். நின்ஸான், பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி றஜாயா, எம். எஸ். ஜௌபர் மற்றும் கலைஞர்களான கவிஞர் பாலமுனை பாறுக், ஈழமதி ஜப்பார், யு எல். மப்றூக், எம்.வஹாப்தீன், எம் ஏ. ரமீஸ், எம். ஜலால்தீன், அதிபர் முஹாஜிரீன் மற்றும் கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

